பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 05 புதன்கிழமை (21-08-1996) UTHAYAN ▲ Lively National Tamil Daily கதிர் 185

## கோமாரி கப்பல் மூலமும் தனியாருக்குப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஒக. 21

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் வர்த்தகர்கள் கொழும்பில் இருந்து பொருள்களை ஏற்றிவர ''கோமாரி'' கப்பலும் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது.

தற்சமயம் தனியாருக்குப் பொருள்களை எடுத்துவரும் பணியில் 'ரீயூனியன்' கப்பல் ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

அதேசமயம் செயலகத்துக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றும் பணியில் ''கல்யாணி'' 'சஜிந்தா' ஆகிய கப்பல்கள் ஈடுபட்டுள்ளன.

## யாழ். மக்களுக்கு 2,000 தொன் அரிசி அனுப்பி வைப்பதற்கு இந்தியா முடிவு

### நல்லெண்ண அடிப்படையில் வழங்கப்படுகிறதாம்

கொழும்பு, ஒக. 21

யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு நல்லெண்ண அடிப்படையில் இரண்டாயிரம் மெற்றிக் தொன் அரிசியை வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை அரசுடன் இந்தியா பேச்சு நடத்தியிருப்பதாகவும் அறியவருகின்றது.

இந்த அரிசியை ஏற்றிக்கொண்டு இந்தியக் கப்பல் ஒன்று அடுத்த மாதம் அள

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பரீட்சை வேளையில் யுத்த நிறுத்தம்: பேச்சு நடத்த செஞ். குழு வன்னிக்கு!

## புலிகளுடன் விரிவாக ஆராயும்

கொழும்பு, ஓகஸ்ட் 21

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி முதல் இடையூறின்றி ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பது—

பரீட்சைக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுத் துருப்புகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிப்பது —

ஆகியவை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையுடன் பேச்சுக்கள் நடத்துவதற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரிகள் நேற்று வன்னிக்குப் புறப்பட்டுச் சென்றதாக அறியவருகின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளுடன் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்கு வவுனியா ஊடாகச் சென்றிருப்பதாக அறியவந்தது.

பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பரீட்சை நிலையங்களுக்குப் பதிலாக புதிய பரீட்சை நிலையங்களை ஏற்படுத்துதல், பரீட்சையைச் சுமுகமாக நடத்துவதற்கான பிறஏற்பாடுகளைச் செய்தல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டபடி உயர்தரப் பரீட்சை: 2 ஆம் திகதி முதல் நடத்த முடிவு

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் திட்டமிட்டபடி எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை ஜி.சீ.ஈ (உயர் தரப்) பரீட்சையை நடத்துவதென கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த உயர்மட்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் பாதுகாப்பு, கல்வியமைச்சு, பரீட்சைத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளும் பங்கு பற்றினர்.

பரீட்சையை நடத்துவதற்கேற்ற சூழ்நிலை உள்ளதா என்பது குறித்து இம் மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது. பின்னர் பரீட்சையை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களை வேறு இடங்களுக்கு மாற்றி பரீட்சையை நடத்துவது என்றும் —

இம்மாநாட்டில் முடிவுசெய்யப்பட்டதாகத் தெரியவந்தது. (உ-3)

## இடம் பெயர்ந்த மக்கள் பலருக்கு வன்னியில் ஆபத்தான நோய்கள்

கொழும்பு, ஒக. 21

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் ஆபத்தான நோய்கள் பரவத்தொடங்கி உள்ளதாகத் தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

மலேரியா, செப்ரிசீமியா, செங்கண்மாரி ஆகிய நோய்கள் அகதிகள் மத்தியில் வெகு தீவிரமாகப் பரவி வருவதாக தொண்டர் நிறுவனப் பணியாளர் ஒருவர் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) கூறியதாக ரோய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

செப்ரிசீமியா நோயினால் பாதிக்கப்பட்ட இரண்டு சிறுவர்கள் மரணமடைந்ததாகவும் அந்தத் தொண்டர் நிறுவனப் பணியாளர் தெரிவித்திருக்கிறார்.

நோய்களால் பீடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் வன்னிப் பகுதியில் உள்ள உள்ளூர் ஆஸ்பத்திரிகளையே சிகிச்சைபெற நாடுகின்றனர் —

இந்த உள்ளூர் ஆஸ்பத்திரிகளுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நடமாடும் வைத்தியர்கள் குழுக்களை அனுப்பி வருகிறது —

தண்ணீர் கிடைக்காத காரணத்தாலும், மாசடைந்த அசுத்தமான தண்ணீரைப் பருகுவதாலுமே அகதிகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழருக்கு ஆதரவாக சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஒக. 21

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதாகக் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகத்தின் பல பகுதிகளிலும் நேற்று ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம்முன்பாக திராவிடக் கழகத்தின் தலைவர் கி. வீரமணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது

முன்னதாக அண்ணா சாலையில் உள்ள பெரியார் சிலையில் இருந்து இலங்கைத் தூதரகத்துக்கு இவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

இலங்கைப் பிரச்சினைக்கு இந்திய மத்திய அரசு தீர்வு காணவேண்டும் என்றும் —

அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் இலங்கை இனப் படுகொலையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும் வீரமணி கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பாட்டாளி மக்கள் கட்சி இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை நிறுத்த மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது. (இ-3)

## துப்பாக்கிச் சூட்டினால் மூன்று சிறுவர்கள் காயம்

நேற்றுக் காலை எட்டு மணியளவில் கொக்குவில் சந்திப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு பாடசாலை மாணவர்களும் மற்றும் ஒரு சிறுவனும் காயமடைந்தனர்.

கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ஒன்பதாம் ஆண்டு மாணவன் சுந்தரலிங்கம் நிசான் (வயது 14), யாழ். இந்துக் கல்லூரி ஆறாம் ஆண்டு மாணவன் கமலநாதன் கபிலன் (வயது 12) மற்றும் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பி. நிரோசன் (வயது 6) ஆகியோரே காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் இருவரும் காலில் காயமடைந்துள்ளனர். மற்றைய சிறுவன் கையில் காயமுற்றார்.

இதேசமயம்—

பூநாறி மடத்துக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் உள்ள கடை ஒன்று எரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

### தோழியின் உறவு முறிந்தது!

## சசிகலாவைக் கைகழுவ ஜெயலலிதா முடிவு?

சென்னை, ஒக. 21

தன் நெருங்கிய தோழியான சசிகலாவைக் கைகழுவி விட தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா முடிவு செய்திருப்பது போல் தோன்றுவதாகச் சென்னைச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது கட்சியான அ. தி. மு. கவின் நிர்வாகக் குழுக் கூட்டத்தைக் கூட்டிய ஜெயலலிதா அங்கு ஆற்றிய உரை சசிகலாவை அவர் கைகழுவி விடத் தயாராகி வருவதையே காட்டுவதாக செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஜெயலலிதாவுடன் ஒட்டி உறவாடிய சசிகலாவின் நட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் கைதானோர் மீது

# பதுளை அல்லது கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கு

பாட்டினரின்சுற்றிவளைட்பு நடவடிக்கைகளின் போது கிழக்கு மாகாணத்தில் கைதான தமிழ்க்கைதிகளுக்கு எதிரான வழக்குகளை பதுளை அல்லது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் முடிவு செய் திருப்பதாக கூறப்படுகிறது.

மட்டுநகர் நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் 8 தவணைகள் போன நிலையிலும் கைதி ஒருவரை பாதுகாப்பு காரணங்களினால் சிறை அதிகாரிகளால் ஆஜர் செய்ய முடியவில்லை என்பதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ - 3)

## யாழ். மாநகரசபை
## முக்கிய அறிவித்தல்

இடிபாடுகளையும் மற்றும் குப்பை கூளங்களையும், நீரோட்ட வடிகால்கள் மற்றும் குளங்களிலும் ஒருசில மக்கள் போட்டு வருகின்றார்கள். இதனால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளைக் கருத்திற்கொண்டு அவ்வாறு செய்வதைத் தவிர்த்து, இடிபாடுகள் குப்பை கூளங்கள் அகற்றப்பட வேண்டியிருப்பின் எமக்கு அறியத்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20-08-1996

(சி/2780)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கலைப்பீடம் 1995/96 கல்வியாண்டு

1995/96 கல்வியாண்டு முதல்கலை, முதல்வர்த்தகம், முதல் முகாமைத்துவம் வகுப்புகள் செப்டெம்பர் 2 ஆம் திகதி ஆரம்பமாகும். விசேஷ பாடங்களுக்கு அனுமதி கிடைத்த மாணவர்கள் காலதாமதமின்றி பதிவுகள் செய்யுமாறு கேட்கப்படுகின்றனர். மேலும் விவரங்களுக்கு கலைப்பீட அலுவலகத்துடன் தொடர்பு கொள்க.

— பதிவாளர்

(சி/2782)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு.வி. தயாபாலன் அவர்களின் அன்புத் தந்தையாரான

மூதறிஞர் திரு. கதிரவேலு விஜயசிங்கம் (கலா சோடாக் கம்பனி உரிமையாளர்) அவர்களின் திடீர் மறைவையிட்டு அதிர்ச்சியும் கவலையும் கொள்கின்றோம்.

இவ்விழப்பால் துயருற்றிருக்கும் எமது கல்லூரி ஆசிரியரின் குடும்பத் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
துணை ஆளணியினர், மாணவர்கள்.

யாழ். மத்தியகல்லூரி,
யாழ்ப்பாணம்.

(42348)

## சமய நந்திகளில்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு —

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நாளாந்தம் காலை 9 மணி தொடக்கம் சமய தீட்சை வழங்கப்படுகிறது. (அ-30)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் நாளாந்தம் பி.ப. 2மணி தொடக்கம் சமயபாட வகுப்புகளும், சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்று வருகின்றன. (அ-30)

★ ★ ★

இணுவில்மேற்கு வட்டுவினி கண்ணகை அம்மன் கோவிலில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் வரலட்சுமி விரத விசேட வழிபாடு நடைபெறும். (அ)

★ ★ ★

கொக்குவில், மாத்தனை, கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று காலை 9.04 மணிக்கும் 9 50 மணிக்கும் இடையில் உள்ள சுபவேளையில் நடைபெறும்.

மகா கும்பாபிஷேகத்துக்கான ஆரம்பக்கிரியைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. (அ)

★ ★ ★

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை அம்மன் கோவில் மணவாளக்கோல சங்காபிஷேகம் இம்மாதம் 31 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். (அ-90)

★ ★ ★

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயக் கொடியேற்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. வருடாந்த உற்சவம் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும். (அ)

★ ★ ★

பருத்தித்துறை, மருதடி ஞானவைரவர் கோவில் வருடாந்த மணவாளக் கோல உற்சவம் இன்று புதன்கிழமை நடைபெறும்.

காலை 8 மணிக்கு அஷ்டோத்தர மகா சங்காபிஷேகமும், நண்பகல் 12 மணிக்கு மணவாளக்கோல உற்சவமும் இடம்பெறும். (அ-173)

★ ★ ★

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறும்.

இம்மாதம் 31 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (அ-117)


## ★ புதுக்கடை திறப்பு விழா ★

இடம்: 812, பருத்தித்துறை றோட், முத்திரைச்சந்தி.
காலம்: 21 – 08 – 96 புதன்கிழமை பகல் 11-00 மணி

"அஜந்தா" வின்

## இணைந்த சேவை

சகல விதமான படம் பிடிக்க
**AJANTHAA**
**PHOTO & VIDEO**
WE UNDERTAKE PHOTOGRAPHY & VIDEOGRAPHY

**அஜந்தா**
குறோசறீஸ்
(வீட்டுப் பாவனைப் பொருள்கள்)

பாடசாலை உபகரணங்கள், பால்மா வகைகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனை நிலையம்.

அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்:
அஜந்தா கலைப்பூங்கா,
நல்லூர்.

63, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

(42344)


## ஆத்மசாந்திக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் செ. செல்வநாயகம்
(B.Sc. Dip. in Ed.)
(பிரபல ஆசிரியர் - விலங்கியல்)

பிறப்பு: **05–11–1936** இறப்பு: **22–07–1996**

பிறந்த திருவூர்: ஏழாலை வாழ்ந்த திருவூர்: இணுவில்

எமது குடும்பத் தலைமகனின் 31 ஆம் நாள் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (21 - 08 - 1996) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ அன்னாரது இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு உதவியவர்களுக்கும் அஞ்சலி உரையாற்றிய கல்விமான்களுக்கும் மாணவர்களுக்கும் எமது நன்றிகள்.

திருமதி சரோஜினி செல்வநாயகம்
(மனைவி)
சகோதரர், பிள்ளைகள், மருமக்கள்.

''சுகந்தம்'',
இணுவில் தெற்கு.
இணுவில்.

(சி/2783)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி இராசரத்தினம்
(Retired Chief Station Master)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், உரும்பராயை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பிரதம புகையிரத நிலைய அதிபர் சின்னத்தம்பி இராசரத்தினம் கனடாவில் காலமானார்.

இவர் கனடாவில் வசிக்கும் யோகலட்சுமியின் (இளைப்பாறிய அதிபர், இராமநாதன் கல்லூரி) அன்புக் கணவரும், பேராசிரியர் சித்தார்த்தன் (அமெரிக்கா), பகீரதன், பரந்தாமன் (கனடா), காலஞ்சென்ற நக்கீரன், அரவிந்தன் (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 21-08-96 கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. பகீரதன்
(மகன்)
உடையார் வளவு,
உரும்பராய்.

MRS. Y. RAJARATNAM,
65, Thorncliefe Park Drive,
Apartment 1512,
Toronto, Ontario M 4 H 1 L 2,
CANADA.

(42346)

### கதிரவேலு விஜயசிங்கம்
(கலா சோடாக் கம்பனி உரிமையாளர்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த கதிரவேலு விஜயசிங்கம் (கலா சோடாக்கம்பனி உரிமையாளர்) 19-8-96 திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற டாக்டர் கதிரவேலு - துளசியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (மகேஸ்வரன் அச்சகம்)- செல்வநாயகி தம்பதிகளின் மருமகனும், தயாபரன் (தயா அச்சக உரிமையாளர்), விஜயராணி (பிரான்ஸ்), விஜயதேவி, தயானந்தன் (கலா சோடா), விஜயகுமாரி, விஜயகௌரி, விஜயகலா, தயாபாலன் (யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தாதேவி, தியாகலிங்கம் (பிரான்ஸ்), புவனேந்திரன் (வேலாயுதபிள்ளை அன்சன்ஸ்) ஜோதிமார்க்கண்டன், ஆனந்தநடேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவதர்சன், யதுர்சன், குகதர்சன், இளங்கோ, கார்த்திபன், சாருஜன், சாளினி, மயூரன், மயூரி, திவ்வியன் ஆகியோரின் அன்புப்பேரனும், திருமதி மகேஸ்வரி அரியரெத்தினம், மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகரெத்தினம் (சாந்தி அச்சக உரிமையாளர்) மகேஸ்வரன் (சுதா அச்சக உரிமையாளர்) திருமதி இசைஞானதேவி நாகரெத்தினம், கதிர்காமநாதன் (பிரான்ஸ்) திருமதி விக்கினேஸ்வரி ஈஸ்வரலிங்கம், விக்கினேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-8-96 புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

166/3 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(42345)

# கொரிய இணைப்பைக் கோரி சோலில் வன்முறைகள் நீடிப்பு

## ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது

சோல், ஓக. 21

வடகொரியாவுடன் தென் கொரியாவை இணைக்கக் கோரி தென்கொரியாவின் தலைநகரான சோலில் பல்கலைக்கழக மாணவர் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த மாணவர்கள் மீது தென்கொரியப் பொலீஸார் நேற்று முன்தினம் மேற்கொண்ட நடவடிக்கையின் போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்;

இந்த மாணவர்கள் பல்கலைக்கழக கட்டடத்தை தம்வசம் வைத்துக் கொண்டு கடந்த ஒருவாரமாக தென்கொரிய அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வந்தனர்.

ஆயிரக்கணக்கான தென்கொரிய பொலீஸார் நேற்று முன்தினம் அந்தக்கட்டடத்தை திடீரென முற்றுகையிட்டனர்.

மாணவர்களின் கடும் எதிர்ப்பையும் முறியடித்து தென்கொரிய பொலீஸார் கட்டடத்தைக் கைப்பற்றினர்.

இத்தாக்குதலில் ஆயிரக்கணக்கான பொலீஸார் காயமடைந்தனர்.

பல மாணவர்கள் கொல்லப்பட்டதாகவும்—

கட்டட இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியிருக்கலாம் எனவும்— தெரிவிககப்பட்டது.

கைதான மாணவர்கள் கைவிலங்கிடப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மற்றுமொரு கட்டடத்தில் உள்ள 100 மாணவர்கள் பொலீஸார் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸாரின் நடவடிக்கை தொடர்கிறது.

(இ - 3)

## திருமணமான நாளில் கணவரை கொன்ற பெண்

கெய்ரோ, ஓக. 21

எகிப்தைச் சேர்ந்த 27 வயது மணப்பெண் ஒருவர் தனது கணவனை திருமணமான அன்று இரவே கொலை செய்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கொலை செய்தபின் அவர் பொலீஸில் சரணடைந்தார்.

ஆஸ்பத்திரி தாதியாக பணிபுரியும் அந்தப் பெண் தான் கற்பிழந்தவள் என்பதை கணவர் கண்டுபிடித்து விடுவாரோ என்ற அச்சம் காரணமாகவே அவரைக் கொலை செய்ததாக பொலீஸில் தெரிவித்துள்ளார். (இ-3)

## விமானத்துக்குள் ஏறி பணம் கொள்ளை!

பாரிஸ், ஓக. 21

பிரான்ஸின் தென்பகுதியில் உள்ள பெர்பிக்னன் விமான நிலைய ஓடு பாதையில் நின்ற விமானம் ஒன்றுக்குள் ஏறிய துப்பாக்கி நபர்கள் விமானத்துக்குள் இருந்த பெரும் தொகையான பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இந்த விமானம் தரையிறங்கிய சிறிது நேரத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

விமானத்துக்குள் ஏறிய ஆயுதம் தாங்கிய குழுவினர் பொதிகள் உள்ள அறையைத் திறக்கும்படி கோரியதாகவும் —

அந்தப்பகுதி திறக்கப்படவே, அங்கிருந்து பெருந்தொகையான பணத்தை அபகரித்துக் கொண்டு வான் ஒன்றில் தப்பிவிட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## அல்ஜீரியாவில் 63 பயணிகள் கொலை

மணிலா, ஓக. 21

அல்ஜீரியாவில் பயணிகள் பஸ் ஒன்றை வழிமறித்த இஸ்லாமிய தீவிரவாதிகள் அதிலிருந்த 63 பயணிகளையும் கழுத்தை அறுத்துக் கொலை செய்துள்ளனர்.

(இ-5)

பங்களாதேஷில்

## ஜனாதிபதி தெரிவுக்கு எதிரான மனு தள்ளுபடி

டாக்கா, ஓக. 21

பங்களாதேஷ் ஜனாதிபதியாக சஹாயுதீன் அகமட் தெரிவானதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சஹாயுதீன் அகமட் முன்னை நாள் உயர்நீதிமன்ற நீதியரசர் எனவும்—

எனவே அவர் சம்பளம் பெறும் பதவியை ஏற்க முடியாது எனவும்— தெரிவித்து இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

### உலக அரங்கில்

கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதியாக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட சஹாயுதீன் அகமட் எதிர்வரும் ஒக்டோபர் ஜனாதிபதியாகப் பதவியேற்பார்.

சஹாயுதீன் அகமட்டை ஒரு நடுநிலைமையாளர் என பங்களாதேஷ் அரசியற் கட்சிகள் பலவும் ஏற்றுக் கொண்டுள்ளன.

(இ1-0)

## குஜராத் மாநிலத்தில் ஜனதா பிளவு

மணிலா, ஓக. 21

குஜராத் மாநில பாரதீய ஜனதாக்கட்சி இரண்டாக உடைந்துள்ளது.

கட்சியில் இருந்து முன்னதாக நீக்கப்பட்ட சங்கர்சிங் வகாலோ தலைமையில் அதிருப்தியாளர்கள் அனைவரும் இணைந்து குஜராத் ஜனதா பரிவுத் என்ற புதிய கட்சியை ஆரம்பித்துள்ளனர்.

இந்த கட்சியின் ஆரம்பக் கூட்டம் அஹமதாபாத்தில் நேற்று முன்தினம் நடந்த சமயம் சுமார் 2லட்சம் மக்கள் அதில் பங்கேற்றனர்.

ஆளும் குஜராத் பாரதீய ஜனதா முதல்வர் சுரேஸ் மேத்தாவின் அரசு பெரும்பான்மையை இழந்து விட்டதாகவும்—

தங்களால் சட்டப் பேரவையில் பெரும்பான்மை பலத்தினை நிரூபிக்க முடியும் எனவும்— மாநில ஆளுநர் கிருஷ்ண பால சிங்கை சந்தித்து வகலோ குழுவினர் கூறியுள்ளனர். (இ-3)

## செச்சின்யாவில் யுத்த நிறுத்தம் முறிவு: இரு தரப்பும் மீண்டும் கடும் சண்டை

செச்சின்யாவில் பிரிவினைவாத கிளர்ச்சியாளர்களுக்கும், ரஷ்யப் படைகளுக்கும் இடையில் எட்டப்பட்ட போர் நிறுத்தம் முறிந்து மோதல்கள் ஆரம்பித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் பிரிவினைவாத கிளர்ச்சியாளர்கள் குறொஸ்னியை அதிரடித் தாக்குதலின்மூலம் கைப்பற்றியதையடுத்து மூண்ட சண்டை உச்சக் கட்டத்தை அடையும் நிலையில்—

ரஷ்ய பாதுகாப்புச் சபைத் தலைவர் அலெக்ஸாண்டர் லெபேட் மேற்கொண்ட சமாதான முயற்சியின் பலனாக போர் நிறுத்தம் ஏற்பட்டு அமைதி நிலவியது.

போர் நிறுத்த கண்காணிப்புக்குழு அமைத்தல், செச்சின்யாவுக்கு பூரண சுதந்திரம் வழங்கல் போன்ற விடயங்களில் இருபகுதியினரும் இணக்கம் காண்பதில் கால தாமதம் நிலவி வந்தது.

இந்நிலையில் மீண்டும் நேற்று பிரிவினைவாத கிளர்ச்சியாளர்களுக்கும், ரஷ்யப் படைகளுக்கும் இடையில் சண்டை ஆரம்பித்துள்ளதாகவும் —

அடுத்த 48 மணித்தியாலங்களில் ரஷ்யப் படைகளின் உச்சத் தாக்குதல் ஆரம்பிக்கலாம் என்றும் — பி. பி. ஸி. குறிப்பிட்டது.

கண்ணிவெடிகள் வைக்கப்படாத பாதையால் குறொஸ்னியை விட்டு அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் வெளியேறுமாறு குடிமக்களை ரஷ்யப் படைகள் கேட்டுள்ளன. (இ-3)

# கிளிநொச்சி அகதிகள் அவலநிலை; அரச அதிபர் கொழும்புக்கு அறிக்கை

கிளிநொச்சி மாவட்ட நிலைமை குறித்து கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். தில்லை நடராஜா கடந்தவாரம் கொழும்பு அரச அதிகாரிகளுக்கு விவரமான அறிக்கை ஒன்றை அனுப்பி இருந்தார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தின் பெருநிலப்பரப்பைச் சேர்ந்த கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒரு லட்சத்து 65 ஆயிரம் பேர் நிரந்தர குடிமக்கள் ஆவர்.

யாழ். குடா நாட்டில் உள்ள பளை பிரதேச செயலக பிரிவின் ஒருபகுதி யாழ் மாவட்டத்துடன் இப்போதைய நிலைமை காரணமாக இணைக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு முதல் 3500 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 500 பேர் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து 19 நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்திருந்தனர். 6400 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரம் பேர் உறவினர், நண்பர்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

''முன்னேறிப் பாய்தல்'' ·'சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மேலும் 2 லட்சம் அகதிகள் யாழ். குடாநாட்டில் இருந்து வந்து சேர்ந்தார்கள்.

மொத்தமாக 2 லட்சத்து 48 ஆயிரத்து 500 பேரை இடம் பெயர்ந்த நிலையில் பராமரித்து வந்த கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 'உண்மை வெற்றி' இராணுவ நடவடிக்கை காரணமாக கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் இருந்து மாத்திரம் ஒரு லட்சத்து 55 ஆயிரம் பேர் இடம்பெயர நேர்ந்துள்ளது.

### அனைத்துமே இடம் பெயர்வு

அரச நிருவாக அலுவலகங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் யாவுமே இப்பகுதியிலேயே இயங்கி வந்தன. கிளிநொச்சி நகரை மையமாகக் கொண்ட இப்பகுதியிலேயே மக்கள் செறிந்து வாழ்ந்து வந்தார்கள். பெருமளவில் இங்கிருந்து இடம் பெயர்ந்தவர்கள் உயிர் பாதுகாப்புக்காக கிளிநொச்சி நகரின் தென் பகுதியில் உள்ள கிராமப் புறங்களின் மூலை முடுக்குகளுக்கும், காட்டுப்பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்து சென்றுள்ளார்கள்.

ஆயிரக்கணக்கானோர் பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்கும் பல்லாயிரக்கணக்கானோர் பரந்தன், முரசுமோட்டை, ஊரியான், கொரக்கன்கட்டு போன்ற பகுதிகளில் இருந்து கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவின் கிழக்குப் பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

இருப்பிட வசதிகள், அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் இடம் பெயர்ந்த மக்கள் நாளாந்தம் இடத்துக்கு இடம் மாறி மாறிச் சென்று கொண்டிருப்பதாலும் மோதல் நிலைமைகள், தாக்குதல்கள் தொடர்வதனாலும், உரிய போக்குவரத்து வசதிகளோ அல்லது தொலைத் தொடர்பு வசதிகளோ இல்லாதிருப்பதனாலும் இடம் பெயர்ந்துள்ள மக்களின் துல்லியமான எண்ணிக்கையைப் பெறுவது இயலாத காரியமாக உள்ளது.

### உணவு நிலைமை

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் இடம் பெயர்ந்தவர்களுக்காகவும், இதுபோன்ற அவசர நிலைமையைச் சமாளிப்பதற்காகவும் வழங்கப்படுகின்ற நிவாரண உணவுப் பொருள்கள் எதுவுமே கையிருப்பில் இல்லை.

கடந்த மே மாதத்திற்குப் பின்னர் ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய நிவாரண பங்கீட்டு உணவுப் பொருள்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்திருந்தவர்களுக்கு வழங்கப்பட வில்லை.

கிராமப்புறங்களைச் சேர்ந்த பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளில் மிகச் சொற்ப உணவுப்பொருள்களே கைவசம் இருந்தன. அவையும் இப்போது முடிந்துவிட்டன.

தற்போது பெரும் உணவுப் பற்றாக்குறை நிலவுகிறது. உடனடியாக சீரான உணவு விநியோக நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் மக்கள் பட்டினி நிலைமைக்குத் தள்ளப்படுவதைத் தவிர்க்க முடியாது. உணவு பற்றாக்குறைகாரணமாக போஷாக்கின்மையினால் பீடிக்கப்பட்டுள்ள குழந்தைகள், சிறுவர்கள், தாய்மார், வயோதிபர்கள் முதலானோர் பட்டினிச் சாவை நெருங்கிக் கொண்டிருக்கின்றனர்.

### புகலிடம்

இடம் பெயர்ந்து பாதுகாப்புத் தேடிச் செல்கின்ற பல்லாயிரக்கணக்கானோருக்கு கிராமப்புறங்களைச் சேர்ந்த காட்டுப்பற்றைகளும், அடர்ந்த மரநிழல்களும், காட்டுப் பாதையோரங்களும் தங்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

றியூட்டரி வாங்குகள், மேசைகள், கேக் றெஜிபோம் வகைகள், கண்ணாடி போர்ட், வயலின், ஓகன், கண்ணாடி அலுமாரி ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ. இரத்தினம், 55, சிவன் புது றோட், நல்லூர். (42339)

### சேவை

தட்டெழுத்து வேலைகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு இல: B418, மண்டுவில் அம்மன் வீதி, ஐயா கடையடி, மீசாலை. (42153)

### திசைமுகம்

இனி திங்கள் தோறும் திசைமுகம் பிரதிகளை சகல இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். 19-08-96 இதழ் தற்போது வேக விற்பனையில். உங்கள் பிரதிகட்கு முந்துங்கள். (42333)

### வாசகர்களுக்கு

தென்மராட்சியில் தரமான பல்வேறு விதமான தமிழ்-ஆங்கில நூல்களைக் குறைந்த கட்டணத்தில் இரவல் பெற்று வாசிக்க விஜயம் செய்யுங்கள்: லிங்க் லெண்டிங் லைப்ரறி, Ling Lending Library, இல.41, தபாலக வீதி, சாவகச்சேரி. (42251)

### ஆங்கிலம் / கணிதம்

Distinction, Credit பெறுபேறுடைய (ஆண்டு 10, 9 உட்பட) கற்பிக்கப்படும். 10 வருட Paper Classes தினமும் பகல் 8-12, பிற்பகல் 3-6 வரை, London Inter ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (42342)

# ஜி.சீ.ஈ. சாதாரணதர, உயர்தர மாணவருக்கு நிறுவனப் பயிற்சி

கொழும்பு, ஒக. 21

ஜி.சீ.ஈ. உயர்தர, ஜி.சீ.ஈ சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்கு அவர்கள் பாடசாலைகளில் பெறும் கல்விக்கு மேலதிகமாக அவர்களுக்கு நிறுவனப்பயிற்சியும் அளிக்கப் படவுள்ளது.

அந்த, அந்தப்பாடங்கள் தொடர்பாக மாணவருக்கு அனுபவ ரீதியான அறிவைப் பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கம் என்றும் —

அரச, கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்கள் மூலமாக நிறுவனப் பயிற்சி வழங்கப்படும் என்றும் — கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரான தெரிவித்தார்.

புதிய திட்டம் தொடர்பான அடிப்படைப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இத் திட்டத்தின் கீழ் விவசாயக்கல்வி பயிலும் மாணவர்கள் அவர்களது விடுமுறை நாள்களில் குண்டசாலை, விவசாய நிலையம் போன்ற நிறுவனங்களிலும் —

வர்த்தக பாடம் பயிலும் மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் உள்ள கணக்காளர் பிரிவுகளிலும் —

ஏனைய மாணவர்கள் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களிலும் — தற்காலிக முறையில் இணைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பாடம் தொடர்பான அனுபவ ரீதியிலான அறிவைப் பெற்றுக் கொடுப்பதே இத் திட்டத்தின் குறிக்கோள் எனவும் அமைச்சர் தெரிவித்தார், (இ - 3)

## காய்கறி பெற்றோல் பிடிபட்டன

சென்னை, ஒக. 21

இலங்கைக்கு கடத்திச் செல்வதற்காக 55 மூடை காய்கறிகளையும், 55 பீப்பாய் பெற்றோலையும்—

ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றை இராமேஸ்வரத்தில் வைத்து இந்திய சுங்கத்துறையினர் கைப்பற்றினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## சீருடைகள் இன்னும் இல்லை

யாழ். போதனாவைத்திய சாலையில் கடமை புரியும் சிற்றூழியர்களின் இந்த வருடத்துக்கான சீருடைகள் இன்னமும் வழங்கப்படவில்லை.

வழமையாக வருடமுற்பகுதியிலேயே சீருடைகள் வழங்கப்பட்டு வந்தன.

சீருடை வழங்குவது தாமதமடைந்திருப்பதை அடுத்து வைத்தியசாலை நிர்வாகம் கொழும்புத் தலைமை காரியாலயத்துடன் தொடர்பு கொண்டும் எதுவித நடவடிக்கைகளும் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை என நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)


## கிறீன் ஞாபகார்த்த வைத்திய சாலைக்கான பதவி வெற்றிடங்கள்

1] M. B. B. S. வைத்தியர்கள் அல்லது R. M. P. வைத்தியர்கள்
2] Resident Certified மருத்துவ பெண் தாதிகள் [Retired Also May Apply]
3] Resident உதவிப்பெண் தாதியர்கள்.

முன் அனுபவமுள்ளவர்கள் மட்டும். வயது 20 – 40

SALARY — NEGOTIABLE

விண்ணப்பங்களை 09-09-1996 க்கு முன் வைத்தியப் பொறுப்பதிகாரியூடாக அனுப்பவும்.

வைத்திய கலாநிதி
திருமதி ச. அம்பலவாணர்
வைத்திய பொறுப்பதிகாரி.

(42341)


## கிளிநொச்சி...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மிடங்களாகியுள்ளன.

### அடிப்படை வசதி இல்லாத நிலை

குழந்தைகள் தொடக்கம் முதியோர்வரையிலான ஆண், பெண்கள், நோயாளிகள், கர்ப்பிணித்தாய்மார்கள் என பலதரப்பட்டவர்களும் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் இவ்வாறு அவலப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கடும் வரட்சி காரணமாக வரண்டு வெப்பம் தகிக்கின்ற மண் பாதைகள், காட்டுப் பாதைகளின் புழுதியினால் மாசடைந்த காற்றையே இந்த மக்கள் சுவாசிக்கின்றார்கள். தேகாரோக்கியம் பாதிக்கப்பட்ட நிலையில் சேலைகளின் மறைப்புகளையே தடுப்புச் சுவர்களாகக் கொண்டு தங்குமிடங்களை அமைத்துக் கொண்டுள்ளார்கள்.

கையில் கிடைத்ததையும், உள்ளவர்களோடு பகிர்ந்து கொள்வதன் மூலம் கிடைத்ததையும் கொண்டு மாலையிலும் முன்னிரவிலும் சமைத்து உண்டு உயிர் வாழ்கிறார்கள்.

### தண்ணீர்ப் பிரச்சினை

தூய குடிதண்ணீர் என்பது மருந்துக்கும் இல்லாத நிலையில் வற்றிக் கலங்கியுள்ள குளத்து நீரையும் தூர இடங்களிலிருந்து மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் கொண்டுவரப்படும் நீரையுமே மக்கள் அருந்துகிறார்கள்.

மாசடைந்த சூழலும், நச்சுப் பாம்புகளும், பிராணிகளுமே இந்த இடம்பெயர்ந்த மக்களின் துணையாக உள்ளன. தேகாரோக்கியத்துக்கும் சீரான மனநிலைக்கும் பாதிப்பு ஏற்படுத்துகின்ற இந்த அவல நிலையைப் போக்குவதற்கு மிக மிக அவசரமான மனிதாபிமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள், விமானக் குண்டுத்தாக்குதல்கள் காரணமாக, பாதுகாப்புத் தேடி அரச ஊழியர்கள் தூர இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். நிறுவனங்களும் இடம் பெயர்ந்துள்ளன.

கிளிநொச்சி ஆதார வைத்தியசாலை அக்கராயன் குளத்தில் ஒரு பகுதியும், மல்லாவியில் ஒரு பகுதியுமாக இயங்குகின்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் (கச்சேரி) நலிவடைந்த நிலையில் ஸ்கந்தபுரத்திற்கு இடம்பெயர்ந்துள்ளது. தேசிய சேமிப்பு வங்கிக்கிளை, கரைச்சி பிரதேச செயலகம் என்பனவும் ஸ்கந்தபுரத்துக்கே இடம் மாறியுள்ளன.

மக்கள் வங்கியின் கிளிநொச்சி கிளை அக்கராயன் குளத்துக்கும் இலங்கை வங்கிக்கிளை மாங்குளத்துக்கும் இடம் மாறியுள்ளன.

### தொண்டர் நிறுவனங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்பட்டு வந்த அனைத்து சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் இம்மாவட்டத்தை விட்டே வெளியேறியுள்ளன. போரூட் நிறுவனமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் ஸ்கந்தபுரத்தில் செயற்படுகின்றன. வசதிகள், நிவாரணப் பொருள்கள் எதுவுமற்ற நிலையில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இவ்விரு நிறுவனங்களும் செயற்படுகின்றன.

ஷெல் வீச்சும், வான் தாக்குதல்களும் தொடர்கின்றன. இதுவரையில் கிடைத்துள்ள விவரங்களின் படி 25 பொது மக்கள் உயிரிழந்து 105 பேர் காயமடைந்துள்ளார்கள். பதற்ற நிலை தொடர்வதனாலும், நெருக்கடி நிலைமைகளினாலும் சரியான சேதவிவரங்களைத் திரட்ட முடியாமல் உள்ளது.

### தேவைகள்

நிவாரண உணவுப் பொருள்களும் பங்கீட்டு உணவுப் பொருள்களும், குழந்தை உணவு, பாலுணவுகள் உடனடியாக அனுப்பி வைக்கப்படவேண்டும். திறந்த வெளிகளிலும், மர நிழல்களிலும் தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு கிடுகுகள், பிளாஸ்டிக் கூரைத் தகடுகள், மலசல கூட அமைப்புகளுக்கான உபகரணங்கள், நீர் விநியோகத்துக்குரிய பவுசர் வண்டிகள், நீர்த் தொட்டிகள், சமையல் பாத்திரங்கள் என்பனவும் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

அரச அதிகாரிகள், ஊழியர்கள், நிறுவனங்களின் ஊழியர்கள், வர்த்தகர்கள் போன்றவர்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

அரச ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு காரணமாக நிவாரண முற்பணம் கடனாக வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். [இ-3]

## தவறவிட்ட பொருள்கள்

நல்லூர் உற்சவத்தின் நேற்றைய திருவிழாவின் போது முருகன் அடியார்களால் கைதவற விடப்பட்ட சில பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுக் கோவிலின் மேற்கு வீதியில் அமைந்துள்ள மாநகரசபையின் உப அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தகுந்த ஆதாரம் காட்டி உரியவர்கள் அவற்றினைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்—

சுற்றாடலில் கண்டெடுக்கப்படும் பொருள்களை மேற்படி அலுவலகத்தில் ஒப்படைக்கலாம் என்றும்—

மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (அ-3)

## ஊழியருக்கு ம. எண்ணெய்

யாழ். போதனாவைத்திய சாலை ஊழியர்கள், உத்தியோகத்தர்களின் பாவனைக்கான மண்எண்ணெய் நிர்வாகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு லீற்றர் 14 ரூபா வீதம் ஆளுக்கு 7லீற்றர் வீதம் வழங்கப்படுகிறது. (இ-15)


## மானிப்பாய் கோவில்பற்று பல நோ. கூ. சங்கம் சங்க அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலை நடத்துவதற்காக 30-09-96 இல் வாக்காளர் இடாப்பு முடிவுறுத்தப்படும். ஒரு பங்கின் பெறுமதியான ரூபா 100/-ஐ செலுத்தியவர்களே தேர்தலில் வாக்களிக்கவும், ஏதேனும் பதவிக்குத் தெரிவு செய்யப்படவும் உரித்துடையவராவார்.

06-03-1992 இன் பின்னர் தவணைப்பணம் மூலமோ அல்லது ஒரே முறையாகவோ ரூபா 100/- பங்கைச் செலுத்தியவர் பணம் செலுத்தத் தொடங்கிய திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னரே வாக்களிக்கவும், ஏதேனும் பதவிக்குத் தெரிவு செய்யப்படவும் உரித்துடையவராவார்.

எனவே ரூபா. 100/-ற்கு குறைவான தொகையை பங்குப் பணமாக உடைய அங்கத்தவர்கள் மீதிப் பணத்தை 30-09-96 இன் முன் செலுத்தி தமது அங்கத்துவத்தை; தகுதியாக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுமுகாமையாளர்/
செயலாளர்.
மானிப்பாய் கோ. ப. பலநோ. கூ. சங்கம்.

19-08-1996 (சி-2778)

ஏகோபித்த மக்களின் வேண்டுகோளுக் கிணங்க மீண்டும் பிரதான வீதியில்

போட்டோ கொப்பி சேவை PRINTO STYLE PHOTO ON LIGHT முறையில்

ENLARGEMENT REDUCTION வசதிகளுடன்

போட்டோ கொப்பி செய்துகொள்ள

ஷண்முகா பார்மசி அன் குறோசறி

இல: 65 (185), பிரதான வீதி, யாழ்ப்பாணம். (42338)

உதயன்

# கொழும்புத் தமிழ் வர்த்தகர் கொலை; மேலும் தகவல்கள் சி. ஐ. டிக்கு

கொழும்பு, ஓக, 21

கொழும்பு தமிழ் வர்த்தகர் செல்லையா சுப்பிரமணியம் வவுனியாவில் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டது தொடர்பாக பல பின்னணி விவரங்கள் இரகசியப் பொலீஸ் இயக்குநரான பிரதிப் பொலீஸ்மா அதிபர் சுமண சேகராவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

சுப்பிரமணியத்தின் சட்டத்தரணியான அப்பாத்துரை விநாயகமூர்த்தி இவற்றை அனுப்பி வைத்தார்.

வடபகுதியைச் சேர்ந்த செல்லையா சுப்பிரமணியம் கொழும்பு, புறக்கோட்டை பிரதான வீதி இல. 237,2/2, இல் புடைவை வர்த்தகராக இருந்தார்.

வவுனியாவில் இருந்து வந்த பயங்கரவாத ஒழிப்பு பொலீஸார் 9-3-96 இல் இவரைக் கைது செய்தனர்.

பலத்த சித்திரவதைக்குள்ளான இவர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார் என்றும்—

இவருக்கு எதிராக வழக்குத் தொடுகக ஆதாரம் இல்லை என்றும் சட்டமா அதிபர் தெரிவித்ததால்கடந்த மாதம் 8 ஆம் திகதி இவர் நீதிவானால் விடுதலை செய்யப்பட்டார்.

தாம் கைதான போது பொலீஸாரால் தம்மிடமிருந்து கைப்பற்றப்பட்ட தமது அடையாள அட்டை, கடவுச்சீட்டு, காசோலைகள், சாரதி அனுமதிப்பத்திரம், கடைத்திறப்பு ஆகியவற்றைப் பெற இவர் தமது மகனுடன் பொலீஸ் நிலையம் போனார் என்றும்—

மறுநாள் வருமாறு சொல்லவே அவர் அன்று (சம்பவ தினம்) சென்றார் என்றும்—

அதன்பின் அவர் காணாமற் போய்விட்டார் என்றும் — சட்டத்தரணியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சட்டத்தரணி சட்டமாஅதிபருக்கும், மனித உரிமை பணிக்குழுவுக்கும் முறையிட்டிருந்தார். இவரை மீண்டும் கைது செய்ததை பொலீஸார் மறுத்திருந்தனர்.

இப்போது இவர் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஏழு பொலீஸார் சி. ஐ. டி பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## மூடப்பட்டுள்ள நெடுந்தீவு நூலகம்

நெடுந்தீவு ஓக. 21

நெடுந்தீவு பிரதேசசபையின் பொது நூலகம் கடந்த ஒரு மாதமாக மூடப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்களும், வாசகர்களும் பெரிதும் சிரமப்படுவதாகத் தெரிகின்றது.

நூலகப் பொறுப்பாளர் விடுமுறையில் சென்றுள்ளதாலேயே நூலகம் மூடப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

(இ-111)

## நேர்மையான நீதி கிடைக்க....

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்கள் மீதான வழக்குகளில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

திருகோணமலையில் நடைபெறும் வடக்கு-கிழக்கு மேல் நீதிமன்றத்தில் இவர்கள் மீதான வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது—

சம்பந்தப்பட்ட இளைஞர்கள் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலங்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்தே நீதிபதி அவர்களை விடுதலை செய்திருக்கிறார்.

சந்தேக நபர்களிடமிருந்து இலங்கைப் பொலீஸார் எவ்வாறு ஒப்புதல் வாக்கு மூலங்களைப் பெறுகிறார்கள் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

தாம் கைது செய்த ஒருவரைக் குற்றவாளியாக்குவதற்கு என்னென்ன தரவுகள், ஆதாரங்கள் தேவை என்பது பொலீஸாருக்கும் இரகசியப் பொலீஸாருக்கும் நன்றாகத் தெரியும்.

தாம் மேற்கொண்ட கைது நியாயமானதே என்று நிலை நிறுத்தும் விதத்தில் ஒப்புதல் வாக்குமூலங்களை இயற்றுவதிலும் அவர்கள் மகா கெட்டிக்காரர்கள்; பெரும் அனுபவசாலிகள்.

நீதிமன்ற வழக்கு விசாரணைகளை உன்னிப்பாக அவதானித்தால் இவை பொதுவானவை என்பது தெரியவரும். உண்மையான குற்றவாளியைப் பிடிக்க முடியாத தமது பலவீனத்தை மறைப்பதற்காக, அப்பாவித் தமிழ் இளைஞர் ஒருவரைக் காரணம் தெரிவிக்காமல் கைது செய்து, அவரைப்பயங்கரவாதச் சந்தேக நபராக்கும் திறமையிலும் பொலீஸார் கை தேர்ந்தவர்கள்.

தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு - அப்பாவித் தமிழ் இளைஞர்களையும் பயங்கரவாதியாகக் காட்டும் இலக்கை எய்துவதற்கு- ஏற்ற விதத்தில் வாக்குமூலத்தைத் தயாரித்து விட்டால்—

அதனை ஒப்புதல் வாக்குமூலமாக நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு என்னென்ன சித்திரவதை ''டோஸ்''களைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் அவர்களுக்கு அத்துப்படி.

ஆகையால் தமிழ் இளைஞர்களைக் குற்றவாளிகளாக்குவதற்காகப் பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் கணிசமானவை சோடிக்கப்பட்டவை எனலாம்.

கொழும்பிலும் தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளிலும் வீதிகளால் செல்லும் போதும், வீடுகளில் வைத்தும் கைது செய்யப்பட்ட, தமிழ் இளைஞர்களில் பலரும்—

வடக்கு - கிழக்கில் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் மிகப் பலரும் -

பொலீஸார் இயற்றிய ஒப்புதல் வாக்குமூலங்களால் பயங்கரவாதிகளாக்கப்பட்டிருப்பர் என்பதனை வடக்கு - கிழக்கு மேல்நீதிமன்றத்தின் குறிப்பிட்ட தீர்ப்பு எச்சரிக்கிறது எனக் கொள்ளலாம்.

கைதாகும் சந்தேக நபர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறும் போது, அவரது சார்பில் சட்டத்தரணி ஒருவர் பிரசன்னமாக இருக்க வேண்டும் என்று ஒரு விதி இருக்குமானால் உண்மையையும் நீதியையும் நிலைநாட்டுவது இலகுவாகும். தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி நாட்டின் சகல பிரஜைகளுக்கும் நேர்மையான நீதி கிடைக்கத் தடங்கலற்ற வழி பிறக்கும்.

## 1,000 வீடுகளைக் கொண்ட விவேகானந்தர் புரம்

### மாங்குளம்- துணுக்காய் வீதியில்

பருத்தித்துறை, ஓக. 21

மாங்குளம்— துணுக்காய் பிரதானவீதியில் வறிய மக்களுக்கென ஆயிரம் வீடுகள் கொண்ட சுவாமி விவேகானந்தர்புரம் அமைக்கப்படவுள்ளது.

சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு விஜயம் செய்த நூற்றாண்டை நினைவு கூருமுகமாக இப் பெருந்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதென பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பின் தங்கிய வாழ்க்கையைச் சீரமைக்கும் பல நிகழ்ச்சித்திட்டங்களை அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும்—

இதற்கான நிதியுதவியை வெளிநாட்டிலுள்ள ஸ்தாபனங்கள் அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

(இ-118)

## நல்லூர் செயலர் பிரிவில் விசேட அடையாள அட்டை

### வெள்ளிக்கிழமைவரை வழங்கப்படும்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் விசேட அடையாள அட்டை வழங்கும் பணி நேற்று ஆரம்பமானது. இப்பணி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் ஒரு மணி முதல் 3 மணிவரை பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

உதவி ஆள்பதிவு ஆணையாளரால் விநியோகத்துக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளுக்குரியவர்களின் பெயர்ப் பட்டியல் கிராம உத்தியோகத்தர்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும்—

அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோர் தத்தமது கிராம உத்தியோகத்தர் அல்லது பாடசாலை அதிபர்களிடம் தமது பெயர் இலக்கத்தை உறுதி செய்தபின் அடையாள அட்டையை பிரதேச செயலகத்தில் பெறலாம் என்றும் — அவர் தெரிவித்தார்.

(இ--3)

## புதுவாழ்வு தா ஐயா!

இராகம்: கேதாரகௌளை தாளம்; ஆதி

ஆற்றங்கரை அருகிருந்து ஆலிலையில் அமுதளித்து
ஊற்றெனவே அருள் சுரக்கும் — உமைபாலா
ஊரை விட்டு நாமோடி தேரைக் காண்போமோ
வென்று
உள்ளம் நொந்து உனையெண்ணி — அழுதோமே
அழுகை ஒலி உன் காதில் விழுந்ததனால்
எமையிங்கே
குழுமி வந்து உனைக்காண — வைத்தாயே
தொடர்ச்சியாகத் தேரோட மகிழ்ச்சியோடு
நாங்காண
கடம்பனே உன் கருணையினால் -- அழைத்தாயே
அல்லும் பகல் தொழுகின்றோம் அமைதி தேடி
அலைகின்றோம்
வள்ளலே நீ கண் திறந்து — பாரையா
யாரை நம்பி நாம்வந்தோம் வேலை ஏந்தும்
வேலாசொல்
போரை நீக்கி புதுவாழ்வு — தா ஐயா
தருண மிது தானையா கருணை கொண்டு கேளையா
அருண கிரி போற்றும் எங்கள் — அழகையா
பாவிகளைப் பாரையா பாவமெல்லாந் தீரையா
பூவ ரசின் கீழுறையும் — பெருமாளே

— அன்னைதாசன் —

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## க. பொ. த. உயர்தர பரீட்சை

யாழ்ப்பாண மக்களின் ஒரே ஒரு சொத்து கல்விதான் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. அதனை நிரூபிப்பது போல, எத்தகு குழப்பமான சூழ்நிலையிலும், யாழ் மாணவர்கள் தங்களது சாதனைகளை நிலைநாட்டி வருகின்றார்கள். சென்ற வருட க. பொ. த உயர்தர பரீட்சையில் பிரபல கல்லூரி ஒன்றின் பத்து மாணவர்கள் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திகள் பெற்றமை இதற்குச் சான்றாகும்.

ஆனாலும் இடப்பெயர்வுகளாலும், அகதி வாழ்க்கையாலும் குடாநாட்டு மாணவர்களின் கல்வி மிகவும் பாதிக்கப்படுகிறது என்பதே உண்மை. இராணுவ நடவடிக்கைகளின் நோக்கங்கள் பல சந்தர்ப்பங்களில் நியாயப்படுத்தக்கூடியனவாக இருந்தாலும், இந்நடவடிக்கைகளால் மாணவர்களின் கல்வி பெரும் குழப்பத்திற்கு உள்ளாகி பல மாணவர்களின் வாழ்க்கையே கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளில் ''முன்னேறிப் பாய்தல்'' 1995 க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு ஒரு மாதம் முன்பாகவும், ''சூரியப் பிரகாசம்'' நடவடிக்கை 1995 க. பொ. த சாதாரணதரப் பரீட்சைக்கு ஒரு மாதம் முன்பாகவும் நடத்தப்பட்டுள்ளன

சூரியப்பிரகாசத்தால் நடைபெறாத 1995 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஒருமாதத்திற்கு முன் நடத்தப்பட்டதெனினும். இக்காலதாமதத்தால் மாணவரின் ஆறு மாதக்கல்வி வீணாகி விட்டது.

### வாசகர் திருமுகம்

தற்போதைய ''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கை காரணமாக பல்லாயிரம் மக்கள் இடம்பெயர்ந்து பட்டினியால் வாடுவதாக அறிகின்றோம். 1996 க. பொ. த உயர்தரப் பரீட்சைக்கு இன்னும் ஒருமாதத்திலும் குறைவான காலமே உள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து எல்லாவற்றையும் விட்டு வன்னிக்கு ஓடிய மக்கள் — மாணவர்கள் தங்கள் கடைசிச் சொத்தாகிய கல்வியையும் இழக்க வேண்டிய துர்ப்பாக்கியமான சூழ்நிலையில் உள்ளனர். அதே வேளை கிளிநொச்சி மக்களும் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி உள்ளனர்.

இந்நடவடிக்கைகள் அரசு மேலிருக்கும் மக்களின் நன்மதிப்பைக் கீழிறக்குவதாகவே அமையும். ஆகவே அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பரீட்சையுடனாவது யுத்த நிறுத்தம் செய்து அரசு மாணவரின் கல்விக்கும் மக்களின் உயிருடைமைகளுக்கும் பங்கம் ஏற்படாது பாதுகாக்க வேண்டும் விடுதலைப் புலிகளும் இது விடயத்தில் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

கி. குருபரன்

கொக்குவில் மேற்கு.

## எடுப்பதும் கொடுப்பதும்

நான் ஒரு பள்ளி ஆசிரியன்.

''ஆசிரியர் மதிப்புயர ......' என்ற ஆசிரியர் தலையங்கத்தை நான் பாராட்டுகின்றேன்.

உயர்ந்தன எல்லாவற்றுக்குமே ஓர் உயர் மரபு உண்டு என்று கல்விப் பெரியோர்கள் கூறுவார்கள். ஆசிரியத்துவம் தொடர்பான தலையங்கம் ஆகையால் தங்களது சிந்தனையும் உயர் மரபுக்குள்ளேயே வந்தமைகின்றது. ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் உள்ளன. மறுபக்கத்தையும் நாம் காணக் கடமைப்பட்டவர்கள்; இதனைத் தாங்கள் ஒத்துக் கொள்ளுவீர்கள் என நினைக்கின்றேன்.

ஆசிரியர் மதிப்பும் அவமதிப்பும் சமூகத்தின் நியமத்தைப் பொறுத்த விடயங்கள்:

கொடுப்பதும் எடுப்பதும் என்றவாறாகத்தான் சமூகத்திலே நடைமுறைகள் அமைவதாகப் பெரியோர்கள் கூறுவார்கள்.

எடுப்பதும் கொடுப்பதும் என்ற நிலைப்பாட்டிற்கு இது நேர் எதிரானது.

இறைவனிடத்திலே அன்பைக் கொடுத்துத்தான் நாம் அருளைப் பெறுகின்றோம்.

அருளை அளவிட முடியாத நிலையிலே இருந்து கொண்டு இறைவனை விமர்சிப்பது அபத்தமானது.

ஆசிரியனிடமிருந்து பெறுகின்ற நன்மையை நாய் இன்னுமே அளவிட முடியவில்லை.

ஆசிரியர் மதிப்புயர நிச்சயம் அவர்கள் இயங்க வேண்டும். சரி. அந்த இயக்கம் உத்தமமாக இருப்பதற்கு அதற்கேற்றவாறு அவர்களை அணுக வேண்டும். முதலிலே ஆசிரியத்துவத்தை வணங்கும் ஆசிரியரும் மாணவரும் பெற்றோரும் கொண்ட சமூகம் அருளப்பட வேண்டும்.

நெல்லுயர நீர் உயர்வதில்லை. சமூகம் ஆசிரியரை மதிக்கும் வரம்பு உயர வேண்டும். அந்த வரம்பு உயராத வரை ஆசிரியனினது அன்பு என்ற நீர் ஊற்றெடுத்தபோதும் நின்று நீடிக்க முடிவதில்லை. அன்பு நீர் உயரத்தான் மாணவச் செல்வங்கள் என்ற நற்பயிர் நீங்கள் எதிர்பார்ப்பது போல உயர்ந்து ஓங்க முடியும்.

ஆசிரியர் அல்லாத கல்வி அங்கத்தவர்கள் எல்லோருமே இந்த 'வரம்பு உயரும்' நிலைப்பாட்டினுள்ளே தான் அடங்குகின்றார்கள்.

இ. இரவீந்திரநாதன்

யாழ். இந்துக் கல்லூரி.

## மாநகர அங்கத்தவராக விக்கிரமபாகு கருணாரத்தின

கொழும்பு, ஒக. 21

கொழும்பு மாநகரசபை அங்கத்தவராக நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்தின நேற்றுமுன்தினம் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இக்கட்சியைச் சேர்ந்த ஜீவரத்தினம் கொழும்பு மாநகர சபை அங்கத்தவராகப் பதவி வகித்து வந்தார்.

ஜீவரத்தினம் கட்சியிலிருந்து விலக்கப்பட்டதையடுத்து அதனால் உருவான வெற்றிடத்திற்கே விக்கிரமபாகு கருணாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியிலிருந்து தான் ஏன் விலக்கப்பட்டார் என்பது பற்றித் தனக்குத் தெரியாது எனவும், தன்மீது எந்தவித ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் ஜீவரத்தினம் தெரிவித்தார். விரும்பியவர்களைச் சேர்க்கவோ, விலக்கவோ ஜே. ஆர். சட்டத்தைக் கொண்டு வந்தபோது அதைக் கடுமையாக எதிர்த்த விக்கிரமபாகு கருணாரத்தின அதே சட்டத்தைப் பயன்படுத்தி தன்னைக் கட்சியிலிருந்து விலக்கியுள்ளார் என ஜீவரத்தினம் குற்றம் சாட்டினார்.

(இ-10)

## வவுனியா தொலைபேசி இலக்கம்

கொழும்பு, ஒக. 21

வவுனியா தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள சகல தொலைபேசி இலக்கங்களும் மாற்றப்பட்டுள்ளன.

இப்போதைய இலக்கத்திற்கு முன்னால் இரண்டு என்ற இலக்கத்தைச் சேர்க்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

### முன்னைய விடுமுறையை ஈடுசெய்ய

## சனிக்கிழமைகளிலும் பாடசாலைகள்

வடமராட்சி, ஒக. 21

யாழ். கல்வி வலயம் இரண்டின் கீழ் உள்ள பல பாடசாலைகள் கடந்த வாரம் முதல் சனிக்கிழமைகளிலும் இயங்கிவருகின்றன.

கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தர விசேட பரீட்சையின்போது பரீட்சை நிலையங்களாக செயற்பட்ட பாடசாலைகளே இவ்வாறு சனிக்கிழமைகளிலும் இயங்கி வருகின்றன.

பரீட்சை நடைபெற்ற நாள்களில் மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டமையால் இப்பாடசாலை நாள்களை ஈடுசெய்யுமுகமாகவே சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது.

ஏழு சனிக்கிழமைகவில் பாடசாலைகள் நடைபெறும்.

(இ-118-173)

## ஈழ அகதிகளை ஏற்றிவரும் மீனவர் மீது இராமேஸ்வரம் பொலீஸ் கெடுபிடி

### ஆட்சேபித்து 25 ஆயிரம் பேர் வேலை நிறுத்தம்

சென்னை, ஒக 21

அகதிகளாக வரும் இலங்கைத் தமிழ் அகதிகளை படகுகளில் ஏற்றிச் செல்வது தொடர்பாக தமிழகப் பொலிசாரின் கெடுபிடிகளுக்கு தாங்கள் ஆளாகுவதாகத் தெரிவித்து இராமேஸ்வரத்தைச் சேர்ந்த சுமார் 25 ஆயிரம் மீனவர்கள் ஐந்து நாள் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

''ரோய்ட்டர்'' செய்தி நிறுவனத்தை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள் கடலில் தங்களை வழிமறித்து அகதிகளை ஏற்றிவிடுவதாகவும்—

ஆனால் அகதிகளை ஏற்றிக் கொண்டு தமிழகக் கரைக்கு வந்து சேர்ந்ததும், அகதிகளை ஏற்றி வருவதற்காக தங்களைத் தமிழகப் பொலீஸார் துன்புறுத்துவதாகவும்—

இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதனை ஆட்சேபித்து ஐந்து நாள்களுக்கு தொழிலுக்குச் செல்லாமல் தாங்கள் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

(உ-3)

## சசிகலாவுக்கு பிணை அனுமதி; ஆனால் வெளியில் வர முடியாது

சென்னை, ஒக. 21

அந்நியச் செலாவணி மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் சசிகலா நடராஜனை மிகப் பெரும் தொகைப் பிணையில் செல்ல சென்னை உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது.

ஆனால் சசிகலாவுக்கு எதிராகப் பிறிதொரு வழக்கு இருப்பதால் அவர் பிணை கிடைத்தும் விளக்க மறியலில் இருந்து வெளியே வர முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான சசிகலா, கடந்த ஜூன் 20 ஆம் திகதி முதல் விளக்க மறியலில் இருப்பது தெரிந்ததே.

அவரைப் பிணையில் விடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட பல மனுக்களைக் கீழ் நீதிமன்றங்கள் நிராகரித்த நிலையில், அவரது பிணை தொடர்பான மேன்முறையீட்டு மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

அவரை மிகப்பெரும் தொகை பிணையில் விட நீதிமன்றம் அனுமதித்தது.

இந்தியாவின் சட்டத்துறைச் சரித்திரத்தில் முன்னர் எப்போதும் இல்லாத ஒரு தொகையை பிணையாகச் செலுத்துப்படி இந்த வழக்கில் நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாக அரசியல், சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர்.

அந்நிய செலாவணி மோசடி வழக்கில் சசிகலாவுக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டாலும் —

அது தொடர்பான விசாரணைக்கு வருமாறு கோரி அமுலாக்கல் பிரிவு அனுப்பிய ஐந்து நோட்டீஸ் உத்தரவுகளை உதாசீனம் செய்தது தொடர்பான வழக்கை சசிகலா இன்னும் எதிர்நோக்க வேண்டியவராக இருக்கின்றார்.

(உ-3)

## அ. தி. மு. க. போட்டிக் குழு இன்று கூடுகின்றது

சென்னை, ஒக. 21

ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. கவிலிருந்து வெளியேற்றப்பட்ட — அக்கட்சியின் மூத்த — பிரமுகர்கள் அக்கட்சியின் போட்டிப் பொதுக்குழுக் கூட்டத்தை இன்று சென்னையில் கூட்டுகின்றனர்.

அண்மையில் ஜெயலலிதாவினால் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட — முன்னாள் தமிழக அமைச்சரவையின் மூத்த அமைச்சர்களான — கண்ணப்பன், முத்துச்சாமி போன்றோரே இந்தப் போட்டிப் பொதுக் குழுவைக் கூட்டியிருக்கின்றார்கள்.

வழக்கறிஞர் விஜயன் தாக்கப்பட்ட வழக்கில் கைதாகி காவலில் வைக்கப்பட்டிருக்கும் மற்றொரு மூத்த முன்னாள் அமைச்சரான எஸ் டி. சோமசுந்தரமும் போட்டிக் குழுவை ஆதரித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

(உ-3)

## தமிழ்நாட்டில் அகதிகள் உண்ணாவிரதம்

சென்னை, ஒக. 21

தமிழ்நாட்டில் கடந்த ஆறு வருடங்களாக அகதிமுகாம்களில் வாழும் அகதிகள் சிலர் கடந்த 14 ஆம் திகதியிலிருந்து உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உண்ணாவிரதத்துக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. (இ-10)

## யாழ் மக்களுக்கு...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வில் நேரடியாக தூத்துக்குடியிலிருந்து காங்கேசன் துறைக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தூத்துக்குடியில் இருந்து காங்கேசன்துறைக்கு உணவுப் பொருள்களுடன் கப்பல் ஒன்று வருவது இதுவே முதல் தடவையாகும்.

இப்போது தூத்துக்குடியிலிருந்து பொருள்களை ஏற்றிய கப்பல்கள் கொழும்பு மற்றும் காலித் துறைமுகங்களுக்கே வந்து செல்கின்றன.

(உ-3)

உ

அராலி கரைப்பிட்டி

**விநாயகர் ஆலயம்**

## மணவாளக் கோல விழா

**22—08—1996** வியாழக்கிழமை

★ காலை சங்காபிஷேகம் (108 கலசம்)

★ மாலை தண்டிகை உற்சவம்

நாதாஞ்சலி:- கேதீஸ்வரன்- உதயசங்கர் குழுவினர்

தேவஸ்தானம்

அன்பளிப்பு: திருவருட்செல்வன் (42337)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### கலைப்பீடம் 1994/95 கல்வியாண்டு

1994/95 கல்வியாண்டு முதல்கலை, முதல்வர்த்தகம், முதல்முகாமைத்துவம், முதல்நடனம், முதல் சங்கீதம் மற்றும் முதலாண்டு சங்கீத, நடன டிப்புளோமா வகுப்புகள் செப்டெம்பர் 2 ஆம் திகதி ஆரம்பமாகும்.

— பதிவாளர்

(சி/2781)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 21-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பரீட்சை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை வேளையில் யுத்த நிறுத்தம் ஒன்றை நடைமுறைப்படுத்துதல் போன்ற விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறையுடன் இந்த அதிகாரிகள்குழு இன்று விரிவாகப் பேச்சு நடத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உயர்தரப் பரீட்சை மூலம் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக சில வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு வழக்கில் —

ஓர் ஆண்டுக்குரிய மேற்படி போட்டிப் பரீட்சை ஒரு தடவை மட்டுமே நடத்தப்பட வேண்டும் என்றும் வெவ்வேறு இடங்களுக்கு ஒரே வருடத்தில் வெவ்வேறு பரீட்சைகளை நடத்தக் கூடாது என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது தெரிந்ததே.

இத்தீர்ப்புக் காரணமாக —

ஒரு பிரதேசத்தில் பெரும் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றால் கூட அப்பிரதேசத்துக்கான பரீட்சையைத் தள்ளிவைத்துவிட்டு, நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பரீட்சையை நடத்த முடியாது என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இக்காரணத்தினால் —

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேசத்தில் எப்படியும் — அங்கு இராணுவ நடவடிக்கையின் பாதிப்பு இருந்தால் கூட — பரீட்சையை நடத்தி முடிக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். (உ-3)

## சசிகலாவைக்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகளும் அவர்களின் நெருக்கமுமே அ. தி. மு. கவின் படுதோல்விக்குக் காரணம் என கட்சிக்காரர்கள் பலர் குற்றம் சுமத்திய போது கூட அதனை ஏற்க மறுத்த ஜெயலலிதா தற்போது ஆற்றியிருக்கும் உரையும், பத்திரிகையாளர்களிடம் கூறிய செய்திகளும் சற்று வியப்பைத் தருவதாக இருந்தன என்று செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

தன்னைச் சுற்றி தன்வீட்டுக்குள் இருந்தவர்களும், தனக்கு நெருக்கமாக இருந்தவர்களும் வெளி உலகோடு தொடர்பு கொண்டு எந்த விதமான செயல்களில் ஈடுபட்டார்கள் என்பது தனக்குத் தெரியவில்லை என்றும் —

இதைத் தனது அரசின் உளவுத்துறை, பொலீஸ்துறை ஆகியன தனக்குத் தெரியாமல் மறைத்து விட்டன என்றும் — ஜெயலலிதா சூசகமாகக் குறிப்பிட்டிருந்தார்.

இப்படி அவர் குறிப்பிட்டது சசிகலாவையும் அவரை நாடி அரசியல் செல்வாக்குப் பெற நினைத்த அவர்களது உறவினர்கள், நண்பர்களையும் தான் என்று பத்திரிகையாளர்கள் ஊகிக்கின்றனர்.

இந்நிலையில் சசிகலாவுடன் உறவை முறித்துக் கொள்ள அவர் தயாராகி விட்டார் என்ற எண்ணம் தான் மேலோங்கி நிற்கிறது என அவதானிகள் குறிப்பிட்டனர். (உ- 3)

## நிர்வாக சேவை பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக. 21

இலங்கை நிர்வாக சேவையில் ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பகுதி ஒன்றுக்கான கிரகித்தல் பரீட்சை எதிர்வரும் செப்டெம்பர் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவையின் ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை கடந்த ஆண்டு ஒக்ரோபர் 15 ஆம் திகதி நடைபெற்றது.

செப்டெம்பர் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள கிரகித்தல் பரீட்சையை அடுத்து விருப்பத்துக்குரிய பாடங்களுக்கான பரீட்சை தொடர்ந்து நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. (இ-5)

## இடம் பெயர்ந்த.,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் எண்ணிக்கையில் நோயால் பாதிக்கப்படுகின்றனர் —

மல்லாவி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்காக நாளாந்தம் 600 முதல் 800 பேர் வரை காத்திருக்கின்றனர் — என்றும் அந்தத்தொண்டர் நிறுவனப் பணியாளர் ரோய்ட்டருக்குத் தெரிவித்தார். (அ)